**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.61/2022**
**Prosecution Witness - PW3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கிருஷ்ணமணி |
| Father’s Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.12.2025.

(Accused Present).
<u>முதல் விசாரணை</u>–

நான் பரசேரியில் வசித்து வருகிறேன். நான் பரசேரி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டிகொண்டிருக்கிறேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனக்கு சாட்சி மாதவன் பிள்ளையை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 24.01.2015ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு ராமராஜன் தோட்டியோட்டில் உள்ள அவரின் அண்ணன் தோட்டத்திற்கு போகும்போது, தோட்டத்தின் அருகில் வைத்து சைலஜன் அவரை வழிமறித்து கெட்ட வார்த்தை பேசி உன்னை யார்லே தோட்டத்திற்கு வரசொன்னார் என்று கூறி மண்வெட்டி கம்பால் இத்தோடு செத்து தொலைந்துபோ என்று சொல்லி அவரின் முதுகு மார்பு, கன்னம் ஆகிய இடங்களில் அடித்து வீக்க காயம் ஏற்படுத்தினார் என்றும், சம்பவத்தினை பார்த்த நான் அருகில் ஓடிவரவும் எதிரி இனிமேல் இந்த தோட்டத்திற்கு வந்தால் வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று ஓடி விட்டார் என்றும், காயம் பட்ட ராமராஜனை நான் ஒரு ஆட்டோ பிடித்து ஆசாரிபள்ளம்

அரசு மருத்துவமனைக்கு சிகிட்சைக்கு சேர்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக உண்மைகளை மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 61/2022**
**Prosecution Witness – PW 4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மாதவன் பிள்ளை |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.12.2025.

(Accused Present).

<u>முதல் விசாரணை</u>–

நான் பரசேரியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 24.01.2015ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு ராமராஜன் தோட்டியோட்டில் உள்ள அவரின் அண்ணன் தோட்டத்திற்கு போகும்போது, தோட்டத்தின் அருகில் வைத்து சைலஜன் அவரை வழிமறித்து கெட்ட வார்த்தை பேசி உன்னை யார்லே தோட்டத்திற்கு வரசொன்னார் என்று கூறி மண்வெட்டி கம்பால் இத்தோடு செத்து தொலைந்துபோ என்று சொல்லி அவரின் முதுகு மார்பு, கன்னம் ஆகிய இடங்களில் அடித்து வீக்க காயம் ஏற்படுத்தினார் என்றும், சம்பவத்தினை பார்த்த நான் அருகில் ஓடிவரவும் எதிரி இனிமேல் இந்த தோட்டத்திற்கு வந்தால் வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று ஓடி விட்டார் என்றும், காயம் பட்ட ராமராஜனை சாட்சி கிருஷ்ணமணி ஒரு ஆட்டோ பிடித்து

ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சிகிட்சைக்கு சேர்த்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக உண்மைகளை மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**